**திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (மானியம்) - 2019**

திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (மானியம்) 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 13½ மாத காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 மே 11 ஆந் திகதிய 9193 எஸ்ஆர்ஜ (ஈஎவ்) ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் 4.02(அ) பிரிவின் IV ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்ட அமுல்ப்படுத்தல் ஆவணத்தின் பிரகாரம், முன்னாள் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சாகவிருந்த தற்போதைய கல்வி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் 10 அமுல்ப்படுத்தல் முகவர்கள் காணப்படுகின்றனர். (அ) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி பயிற்சி துறையில் ஈடுபட்டுள்ள தனியார் துறையை வலுப்படுத்துதல், (ஆ) பெண்களை முன்னிறுத்தி சுயதொழில் தொழில்முனைவோர் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை முன்னேற்றுதல், (இ) பாரம்பரியமற்ற பகுதிகளிற்கு பெண்களை கவர்வதற்கு இலக்கிடப்பட்ட ஊக்குவிப்புக்கள், வழிகாட்டல் மற்றும் வேலைப்பயிற்சி வழங்கல் மற்றும் (ஈ) தனியார் துறையில் பாலினம் உள்ளடங்கிய ஆட்சேர்ப்பு மற்றும் வேலைச் சுற்றாடல் நடைமுறைகளை நிரூபித்தல் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாகும். உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 534 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 3 மில்லியனாகக் காணப்பட்டதுடன் வறுமை குறைப்பிற்கான ஜப்பான் நிதியத்தால் (ஜேஎவ்பிஆர்) நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டதுடன் செயற்திட்ட நிதியிடல் நோக்கங்களிற்காக ஏடிபீ ஆல் இது நிர்வகிக்கப்படுகின்றது. நிகழ்ச்சித்திட்டம் அதன் செயற்பாடுகளை 2018 நவம்பர் 16 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 மார்ச் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (மானியம்) திசெம்பர் 31 இல் முடிவடைந்த 13½ மாத காலப்பகுதிக்கான இணைக்கப்பட்டுள்ள செலவினக் கூற்று பொழிப்பு பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் செலவினக் கூற்று பொழிப்பின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 செலவினக் கூற்று பொழிப்பிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

செலவினக் கூற்று பொழிப்பை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செலவினக் கூற்று பொழிப்பை தயாரிக்கும் போது, நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிகழ்ச்சித்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.6 செலவினக் கூற்று பொழிப்பின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து செலவினக் கூற்று பொழிப்பு விடுபட்டுள்ளதா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த செலவினக் கூற்று பொழிப்பை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம்

தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | மானிய உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரை, 4.02(அ) பிரிவின் பிரகாரம் மானியத்தின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் ஏடிபீ இற்கான ஏற்றுக்கொள்ளத்தக்க நிதி அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க தயாரிக்கப்பட வேண்டும். மேலும் அரச கணக்குகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 1994 ஏப்ரல் 20 ஆம் திகதிய | நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலைமைக் கூற்று நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை . | முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் 4 ஆம் பந்தியில் வெளிப்படுத்தப்பட்டவாறு நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய வழக்கம் மற்றும் காசு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தது. இது மானிய உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரை, 4.02(அ) பிரிவுடன் இணங்குகின்றது. ஏடிபீ தேவைப்பாட்டின் பிரகாரம் செயற்திட்ட நிதிக்கூற்றின் உள்ளடக்கம் கீழே தரப்படுகின்றது.<br><br>– காசுப் பெறுவனவு மற்றும் | நிகழ்ச்சித்திட்ட உடன்படிக்கைக்கு இணங்கவும் அரசாங்க தேவைப்பாடுகளின் பிரகாரமும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | 30/94 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டு மானியங்கள் மற்றும் கடன்களின் வருடாந்த கணக்குகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும். எனினும் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் காசு அடிப்படையில் தயாரிக்கப்பட்டு செலவினக் கூற்று பொழிப்பு, காசு பெறுவனவு மற்றும் கொடுப்பனவு கூற்று மற்றும் பாதீட்டுக் கூற்று எதிர் 2019 திசெம்பர் 31 இல் டொலர் பெறுமதியிலுள்ள உள்ளபடியான செலவினம் என்பவற்றுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | | கொடுப்பனவுகள் கூற்று<br>– பாதிடப்பட்ட எதிர் உள்ளபடியான செலவினக் கூற்று<br>– கட்டுநிதிக் கணக்குக் கூற்று (பொருத்தமான இடத்தில்)<br>– செலவினக் கூற்று பொழிப்பு (பொருத்தமான இடத்தில்)<br>– முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் விளக்கக் குறிப்புக்கள்<br>– இணங்கப்பட்ட ஏதாவது மேலதிக பட்டியல்கள் (உதாரணம் - செலவினப் பொழிப்பு)<br><br>ஆகையால் நிதிக்கூற்று தேவைப்பாட்டுடன் இணங்குகின்றது. | |
| (ஆ) | நிகழ்ச்சித்திட்ட அமுல்ப்படுத்தல் ஆவணத்தின் 20 ஆம் பந்தியின் பிரகாரம் அமுல்ப்படுத்தல் முகவர் மானிய நிதிகளை பெற்றுக்கொள்வதற்கு தனியான வங்கிக் கணக்கொன்றை திறக்க வேண்டியதுடன் வங்கிக் கணக்குக் கூற்றுக்கள் ஆதே போல் மானியப் பெறுகைகளை பயன்படுத்தி நிதிக் கொடுக்கல் வாங்கல்களின் விபரமான கணக்கீடு என்பவற்றை பேணுதல் | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் சரியான தன்மையை சரிபார்க்க முடியாதிருந்தது. | செயற்திட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் இலங்கை சர்வதேச திட்டம் பொதுவான வங்கிக் கணக்கொன்றை பயன்படுத்தியிருந்த போதிலும் 2020 பெப்ரவரி தொடக்கம் அமைச்சு தேவைப்பாட்டின் பிரகாரம் செயற்திட்டத்திற்காக தனியான வங்கிக் கணக்கொன்றை அவர்கள் திறந்திருந்ததுடன் 2020 ஒக்தோபர் 06 இலிருந்து செயற்திட்டத்தின் புதிய அமுல்ப்படுத்தல் பங்காளராக செயற்திட்டத்திற்காக தனியான வங்கிக் கணக்கொன்றை Oxfam திறந்திருந்தது. | நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக் கொடுக்கல் வாங்கல்களிற்காக தனியான வங்கிக் கணக்கு திறக்கப்பட வேண்டும். |

வேண்டும். எனினும் அமுல்ப்படுத்தல் முகவர் கணக்காய்வு திகதியான 2020 ஒக்தோபர் 17 வரையிலும் தனியான வங்கிக் கணக்கொன்றை திறந்திருக்கவில்லை.

### 2.2 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | விளைவு | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் வழங்கப்பட்ட 2007 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/2 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்று 2020 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னா கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்று 2020 யூன் 17 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கைள சமர்ப்பிப்பதில் தாமதம். | கருத்துரை வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் மானியத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 2.3 மீளப்பெறல் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதில் தாமதங்கள்

| இல. | டபிள்யூஏ இன் இல. | காலப்பகுதி | சமர்ப்பித்தல் திகதி | தாமதமான நாட்கள் | விளைவு | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|---|
| (i) | 01 | 2018 திசெம்பர் – 2019 மார்ச் | 2019 ஆகஸ்ட் 02 | 124 நாட்கள் | நிகழ்ச்சித்திட்ட அமுல்ப்படுத்தலில் தாமதங்கள் | 2020 மார்ச் 26 இல் உள்ளவாறு ஐ.அ.டொலர் 109,837.91 கூட்டுமொத்தம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் | முகாமைத்துவம் உரிய நேரத்தில் மீளப்பெறல் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |
| (ii) | 02 | 2019 ஏப்ரல் - 2019 | 2019 திசெம்பர் 24 | 146 நாட்கள் | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | யூலை | | | அவுஸ்திரேலியா சர்வதேச திட்டத்திற்கு பணவளிப்புச் செய்யப்பட்டிருந்தது. |
| (iii) | 03 | 2019 ஆகஸ்ட் - 2019 திசெம்பர் | 2020 மார்ச் 02 | 62 நாட்கள் | |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

| இல. | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | விளைவுகள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் | | | |
| | அலகுகள்/ சதவீதம் | அலகுகள்/ சதவீதம் | | | |
| (அ) | மீளாய்வுக் காலப்பகுதியின் போது 6,524 பங்குபற்றுநர்களின் பயிற்சியை பூர்த்தி செய்தல். | 5,053 பங்குபற்றுநர்கள் மாத்திரம் பயிற்சியை பூர்த்தி செய்திருந்தனர். அதற்கிணங்க இடைவிலகல் விகிதம் 23 சதவீதமாக காணப்பட்டது. மேலும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை முழுமையாக பூர்த்தி செய்யாமல் 50 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான வீச்சில் 16 பயிற்சி நிலையங்களில் நடாத்தப்பட்ட 18 பயிற்சி கற்கைநெறிகளிலிருந்து பயிற்சியாளர்கள் விலகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் உரிய நேரத்தில் அடைந்து கொள்ளப்பட முடியாதிருந்தது. | குறித்துக் கொள்ளப்பட்டது. | நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு பயிற்சிகளை திட்டமிட்டு அமுல்ப்படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிகழ்ச்சித்திட்டத்தின் விபரமான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் | | நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட | குறித்துக் கொள்ளப்பட்ட | நிகழ்ச்சித்திட்டத்தின் அரைவாசிக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | மீளாய்வுக் காலப்பகுதியின் போது ஐ.அ.டொலர் 462,060 மதிப்பிடப்பட்ட கிரயத்தில் இந் நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து 04 எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளின் கீழ் 19 நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 07 நடவடிக்கைகள் மாத்திரம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் அவை தொடர்பாக ஐ.அ.டொலர் 31,823 தொகை செலவிடப்பட்டிருந்தது. | நோக்கம் அடைந்துகொள்ளப்பட முடியாதிருந்தது. | து. | மேற்பட்ட காலப்பகுதி ஏற்கனவே ஏற்கனவே பூர்த்தியடைந்திருந்ததால் நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கையில் முன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி பயிற்சி துறையிலுள்ள பெண்களை வலுவூட்டுதல் இந் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கமாக உள்ள போதிலும் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக மீளாய்வுக் காலப்பகுதியின் போது 6,524 பயிற்சியாளர்களின் பங்குபற்றலுடன் 84 பயிற்சி நிலையங்களில் 226 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. மொத்த பங்குபற்றுநர்களில் 24 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 1,543 பெண்கள் மாத்திரமே அப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிற்கு வருகை தந்திருந்தனர். மேலும் தனியொரு பெண்ணின் பங்குப்பற்றலின்றி 110 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. | நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம் அடைந்துகொள்ளப்பட முடியாதிருந்தது. | குறித்துக் கொள்ளப்பட்டது. | நிகழ்ச்சித்திட்ட கண்காணிப்பு பிரிவு நெருங்கிய மேற்பார்வையை கொண்டிருக்க வேண்டியதுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவை அடைந்துகொள்வதற்கு மதியுரையாளர்களுடன் ஒருங்கிணைதல் வேண்டும். |